Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனி, ஜனவரி 03, 2026 | இதழ் 265

# மன்னத்து பத்மநாபனின் பிறந்தநாளில் பிரதமர் மரியாதை



சென்னை, 03 ஜனவரி 2026: சுதந்திர போராட்ட வீரரான மன்னத்து பத்மநாபனின் பிறந்தநாளான இன்று, பிரதமர் திரு நரேந்திர மோடி, சமுதாயத்திற்கு சேவை செய்வதையே தனது வாழ்நாள் லட்சியமாகக் கொண்ட அந்த மாபெரும் ஆளுமையை மிகுந்த மரியாதையுடன் நினைவு கூர்ந்துள்ளார்.

உண்மையான முன்னேற்றம் என்பது கண்ணியம், சமத்துவம் மற்றும் சமூக சீர்திருத்தத்தில் வேரூன்றியுள்ளது என்று நம்பிய ஒரு தொலைநோக்கு சிந்தனையாளர் மன்னத்து பத்மநாபன் என்று பிரதமர் புகழ்ந்துள்ளார். சுகாதாரம், கல்வி மற்றும் மகளிர் அதிகாரம் போன்ற துறைகளில் பத்மநாபனின் முன்னோடி முயற்சிகளை அவர் குறிப்பிட்டுள்ளார். அவை நாட்டிற்கு பெரும் உத்வேகத்தின் ஆதாரமாகத் திகழ்கின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

மன்னத்து பத்மநாபனின் லட்சியங்கள், நீதி, கருணை மற்றும் நல்லிணக்கம் நிறைந்த ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கு நமக்கு தொடர்ந்து வழிகாட்டுகின்றன என்று திரு மோடி தெரிவித்துள்ளார்.

சமூக ஊடக எக்ஸ் வலைதளத்தில் திரு மோடி கூறியிருப்பதாவது:

“மன்னத்து பத்மநாபனின் பிறந்தநாளான இன்று, சமுதாயத்திற்கு சேவை செய்வதையே தனது வாழ்நாள் லட்சியமாகக் கொண்ட அந்த மாபெரும் ஆளுமையை மிகுந்த மரியாதையுடன் நினைவுகூர்கிறோம். உண்மையான முன்னேற்றம் என்பது கண்ணியம், சமத்துவம் மற்றும் சமூக சீர்திருத்தத்தில் வேரூன்றியுள்ளது என்று நம்பிய ஒரு தொலை நோக்கு சிந்தனையாளர் அவர். சுகாதாரம், கல்வி, மகளிர் அதிகாரம் போன்ற துறைகளில் அவரது முயற்சிகள் மிகுந்த ஊக்கமளிக்கின்றன.



அவரது லட்சியங்கள், நீதி, கருணை மற்றும் நல்லிணக்கம் நிறைந்த ஒரு சமூகத்தை நோக்கி நமக்கு தொடர்ந்து வழிகாட்டுகின்றன.”

# கடந்த மாத ஜி.எஸ்.டி. வசூல் ரூ.1.74 லட்சம் கோடி

சென்னை, 03 ஜனவரி 2026: கடந்த மாதத்தில் வசூலான ஜி.எஸ்.டி. வரி குறித்து மத்திய நிதி அமைச்சகம் தகவல் தெரிவித்தது. 2025-ம் ஆண்டு டிசம்பரில் ரூ.1.74 லட்சம் கோடி வரி வசூலானது.

இந்தியாவில் சரக்கு மற்றும் சேவைகள் வரி (ஜி.எஸ்.டி.) என்பது மத்திய மற்றும் மாநில அரசுகளின் முக்கிய வருவாய் ஆதாரமாகும். கடந்த ஆண்டில் செப்டம்பர் 22-ந்தேதி ஜி.எஸ்.டி வசூலில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. இதனால் நாட்டில் 375 பொருட்களுக்கான ஜி.எஸ்.டி. விகிதங்கள் குறைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கடந்த டிசம்பர் மாதத்தில் வசூலான மொத்த ஜி.எஸ்.டி. வசூல் குறித்து மத்திய நிதி அமைச்சகம் நேற்று தகவல் தெரிவித்தது. அதன்படி 2025-ம் ஆண்டு டிசம்பரில் ரூ.1 லட்சத்து 74 ஆயிரம் கோடி ஜி.எஸ்.டி. வசூல் ஆனது. இது 2024-ம் ஆண்டு டிசம்பர் மாத வசூலை காட்டிலும் 6 சதவீதம் அதிகமாகும். அப்போது ரூ.1 லட்சத்து 64 ஆயிரம் கோடி ஜி.எஸ்.டி. வரி வசூலானது.

உள்நாட்டு பரிவர்த்தனைகளில் இருந்து மொத்த வருவாய் ரூ.1 லட்சத்து 22 ஆயிரம் கோடியாகும். இது அதற்கு முந்தைய ஆண்டு வசூலை காட்டி




லும் 1.2 சதவீதம் அதிகமாகும். இறக்குமதி பொருட்களில் இருந்து கிடைத்த வருவாய் 19.7 சதவீதம் உயர்ந்து ரூ.51 ஆயிரத்து 977 கோடியானது.

திருப்பிச் செலுத்தப்பட்ட (ரீபண்ட்) தொகை, 31 சதவீதம் உயர்ந்து ரூ.28 ஆயிரத்து 980 கோடியாக இருந்தது. ரீபண்ட் தொகையை கழித்த பின்னான நிகர ஜி.எஸ்.டி. வருவாய் ரூ.1 லட்சத்து 45 ஆயிரம் கோடியை கடந்தது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.2 சதவீத உயர்வாகும். ஜி.எஸ்.டி.க்கு மேல் வசூலிக்கப்படும் வரி இழப்பீடு செஸ் எனப்படும். புகையிலை, ஆடம்பர கார்கள், நிலக்கரி, மது உள்ளிட்டவற்றுக்கு வசூலிக்கப்பட்டு வந்தது.

ஜி.எஸ்.டி. சீர்திருத்தத்துக்கு பின்னர் புகையிலை, மது உள்ளிட்டவற்றை தவிர்த்து மற்ற பொருட்களுக்கு செஸ் வரி ரத்து செய்யப்பட்டது. இதனால் கடந்த மாதத்தில் ரூ.4 ஆயிரத்து 238 கோடியாக குறைந்தது. இது 2024 டிசம்பரில் வசூலிக்கப்பட்ட ரூ.12 ஆயிரம் கோடியுடன் ஒப்பிடுகையில் 64.7 சதவீதம் வீழ்ச்சியாகும்.




# இந்திய மருந்தியல் ஆய்வறிக்கையின் 10-வது பதிப்பை மத்திய சுகாதார அமைச்சர் ஜே.பி. நட்டா வெளியிட்டார்

சென்னை, 03 ஜனவரி 2026: மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலன், ரசாயனங்கள் மற்றும் உரத் துறை அமைச்சர் திரு ஜே.பி. நட்டா, இன்று புதுதில்லியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையத்தில் இந்திய மருந்தியல் ஆய்வறிக்கையின் 10-வது பதிப்பை வெளியிட்டார், இது மருந்துகளின் தரம், பாதுகாப்பு மற்றும் செயல்திறனை வலுப்படுத்துவதற்கான இந்தியாவின் தொடர்ச்சியான முயற்சிகளில் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையைக் குறிக்கிறது.

புதிய பதிப்பை வெளியிட்ட திரு நட்டா, இந்திய மருந்தியல் ஆய்வறிக்கை , நாட்டில் மருந்துகளுக்கான அதிகாரப்பூர்வ தரநிலைப் புத்தகமாக செயல்படுகிறது என்றும், மருந்துகளுக்கான இந்தியாவின் ஒழுங்குமுறை கட்டமைப்பின் ஒரு மூலக்கல்லாக உள்ளது என்றும் கூறினார். 10-வது பதிப்பு அறிவியல் முன்னேற்றங்கள், உலகளாவிய சிறந்த நடைமுறைகள், மருந்து உற்பத்தி மற்றும் ஒழுங்குமுறையில் இந்தியாவின் வளர்ந்து வரும் தலைமையைப் பிரதிபலிக்கிறது என்றும் அவர் கூறினார்.

இந்திய மருந்தியல் ஆய்வறிக்கை -2026, 121 புதிய மோனோகிராஃப்களை இணைத்துள்ளதையும், மொத்த மோனோகிராஃப்களின் எண்ணிக்கையை 3,340 ஆக உயர்த்தியதையும் அவர் எடுத்துரைத்தார். காசநோய் எதிர்ப்பு, நீரிழிவு எதிர்ப்பு மற்றும் புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகள், இரும்புச் சத்துக்கள் உள்ளிட்ட முக்கிய சிகிச்சை பிரிவுகளில் பாதுகாப்பு கணிசமாக வலுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் பல்வேறு தேசிய சுகாதாரத் திட்டங்களின் கீழ் பயன்படுத்தப்படும் மருந்துகளின் விரிவான தரப்படுத்தலை உறுதி செய்வதாகவும் அவர் கூறினார்.

சமீபத்திய ஆண்டுகளில், இந்திய மருந்தியல் தரநிலைகள் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன, ஏனெனில் இது இந்திய அரசின் சுகாதாரத் துறையின் கீழ் ஒரு மையப்படுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரலாக மாறியுள்ளது. இந்திய மருந்தியல் ஆய்வறிக்கை இப்போது உலகின் தெற்கின் 19 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்திய மருந்தியல் கண்காணிப்புத் திட்டத்தின் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும் திரு நட்டா எடுத்துரைத்தார். உலக சுகாதார அமைப்பின் மருந்தியல் கண்காணிப்பு தரவுத்தளத்தில் 2009-2014-ம் ஆண்டில் பங்களிப்புகளின் அடிப்படையில் உலகளவில் 123-வது இடத்தில் இருந்த இந்தியா, தற்போது 2025-ம் ஆண்டில் உலகளவில் 8-வது இடத்திற்கு உயர்ந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார். இந்த குறிப்பிடத்தக்க சாதனைக்காக ஐபிசி மற்றும் பிவிபிஐ குழுவைப் பாராட்டிய திரு நட்டா, வலுப்படுத்தப்பட்ட மருந்தியல் கண்காணிப்பு சூழல் அமைப்பு நோயாளி பாதுகாப்பு, தர உறுதி மற்றும் வலுவான ஒழுங்குமுறை கண்காணிப்புக்கான இந்தியாவின் நிலையான அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது என்று கூறினார்.

மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் (இரண்டாவது திருத்தம்) விதிகள், 2020-ன் விதிகளின்படி, இந்திய மருந்தியல் 2026-ல் ரத்த மாற்ற மருத்துவம் தொடர்பான 20 ரத்தக் கூறுகள் முதன்முறையாக சேர்க்கப்பட்டுள்ளதை அவர் சுட்டிக் காட்டினார்.

இந்திய மருந்தியல் ஆய்வறிக்கை 2026 மருந்து தரத் தரங்களை மேலும் வலுப்படுத்தும், இந்தியாவின் சூழுங்கு முறை கட்டமைப்பை வலுப்படுத்தும் மற்றும் உலகளாவிய மருந்துத் துறையில் நாட்டின் நிலையை மேம்படுத்தும் என்று நம்பிக்கை தெரிவித்து, இந்திய மருந்தியல் ஆணையம் மற்றும் பத்தாவது பதிப்பை வெளியிடுவதில் ஈடுபட்டுள்ள அனைத்து பங்குதாரர்களையும் மத்திய அமைச்சர் மீண்டும் ஒருமுறை பாராட்டினார்.

இந்திய மருந்தியல் ஆய்வறிக்கை 2026, மருந்துத் தரங்களை மேலும் வலுப்படுத்தும், இந்தியாவின் ஒழுங்குமுறை கட்டமைப்பை வலுப்படுத்துவதுடன் உலகளாவிய மருந்துத் துறையில் நாட்டின் நிலையை மேம்படுத்தும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இந்திய மருந்து கட்டுப்பாட்டுத் துறைத் தலைவர் டாக்டர் ராஜீவ் சிங் ரகுவன்ஷி, சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் இணைச் செயலாளர் திரு. ஹர்ஷ் மங்களா, இந்திய மருந்தக ஆணையத்தின் செயலாளர் மற்றும் அறிவியல் இயக்குநர் டாக்டர் வி. கலைச் செல்வன் மற்றும் பிற முன்னணி தொழில் வல்லுநர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீரங்கத்தில் 5-ந்தேதி “மோடி பொங்கல்” மத்திய அமைச்சர் அமித்ஷா பங்கேற்கிறார்

சென்னை, 03 ஜனவரி 2026: திருச்சி ஸ்ரீரங்கத்தில் வருகிற 5-ந்தேதி 2 ஆயிரம் பெண்கள் பங்கேற்கும் ‘மோடி பொங்கல்’ என்ற நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் அமித்ஷா பங்கேற்கிறார்.

சட்டசபை தேர்தலுக்கு, இன்னும் 3 மாதங்களே இருக்கும் நிலையில், அரசியல் கட்சிகள் பிரசார பயணங்களை முன்னெடுத்துள்ளது.

கூட்டணி, தொகுதி பங்கீடு, மக்கள் சந்திப்பு, பொதுக்கூட்டங்கள், கட்சி நிகழ்ச்சிகள் என்று அரசியல் கட்சிகள் தங்களை பரபரப்பு வட்டத்திற்குள் வைத்துக்கொண்டு இருக்கின்றன. இந்த நிலையில், அண்ணா தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றுள்ள பா.ஜ.க. சட்டசபை தேர்தல் பிரசாரத்தை தித்திக்கும் பொங்கலுடன் தொடங்க இருக்கிறது. தொடர்ந்து 2 மாதங்களுக்கு தீவிர பிரசாரத்தை முன்னெடுக்கவும் பா.ஜ.க. வியூகங்கள் அமைத்து வருகிறது. அந்த வகையில் வருகிற 5-ந்தேதி ஸ்ரீரங்கத்தில் ‘மோடி பொங்கல்' நிகழ்ச்சி முன்னெடுக்கப்பட்டு உள்ளது. இதில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பங்கேற்க உள்ளார். கூட்டணி கட்சி தலைவர்களும் பங்கேற்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

இதற்கிடையே, தமிழக பா.ஜ.க. துணைத்தலைவர் கரு. நாகராஜன் சென்னையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

ஜனவரி 4-ந்தேதி மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா புதுக்கோட்டைக்கு வர உள்ளார். அன்றைய தினம் மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் நடத்தி வரும் ‘தமிழகம் தலைநிமிர தமிழனின் பயணம்’ என்ற யாத்திரையின் நிறைவு விழா நடக்கிறது. இந்த விழாவில் அவர்




பங்கேற்று பேசுகிறார்.

இதில், சுமார் 2 லட்சம் பேர் பங்கேற்க இருக்கின்றனர். இதையடுத்து, திருச்சியில் அமித்ஷா தங்குகிறார். பின்னர், மறுநாள் (5-ந்தேதி) திருச்சி ஸ்ரீரங்கம் கோவிலுக்கு செல்கிறார். இதையடுத்து காலை 11 மணி அளவில் மன்னார்புரம் ராணுவத்திடலில் ஏறக்குறைய 2 ஆயிரம் பெண்கள் பங்கேற்கும் "மோடி பொங்கல்" விழாவில் அமித்ஷா கலந்து கொள்கிறார்.

அமித்ஷா கலந்து கொள்ளும் நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் பியூஸ் கோயல், பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளர்கள், மேலிட பொறுப்பாளர்களும் பங்கேற்கிறார்கள்.

தொடர்ந்து, அடுத்தடுத்து தேசிய தலைவர்கள் தமிழகம் வர இருக்கின்றனர். பிரதமர் மோடியும் வர உள்ளார். பொங்கலுக்கு பிறகு இந்த பயணங்கள் அனைத்தும் வேகமெடுக்கும். அதே போல், பொங்கலுக்கு பிறகு கூட்டணிகள் இறுதி வடிவம் பெறும். இவ்வாறு அவர் கூறினார்.

# டொயோட்டா கிற்லோஸ்கர் மோட்டார் 2025-ஆம் ஆண்டில் 3.88 லட்சம் விற்பனையுடன் வரலாற்றுச் சாதனை

சென்னை 03, ஜனவரி 2026: டொயோட்டா கிற்லோஸ்கர் மோட்டார் (டிகேஎம்) நிறுவனம், 2025 ஆம் ஆண்டில் மொத்தம் 3,88,801 வாகனங்களை விற்பனை செய்து, இதுவரை இல்லாத உயர்ந்த ஆண்டு சாதனையைப் பதிவு செய்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19% வளர்ச்சியாகும். தரம், பாதுகாப்பு மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கையை மையமாகக் கொண்ட நிறுவனத்தின் தொடர்ச்சியான முயற்சிகளின் விளைவாக இந்த சாதனை நிகழ்ந்துள்ளது.

2025 ஆம் ஆண்டில், உள்ளூர் சந்தையில் 3,51,580 வாகனங்களும், ஏற்றுமதியாக 37,221 வாகனங்களும் விற்பனையாகின. இதன் மூலம் உள்ளூர் விற்பனையில் 17% வளர்ச்சியும், ஏற்றுமதியில் 42% வளர்ச்சியும் பதிவாகியுள்ளது. டிசம்பர் 2025 மாதத்தில் மட்டும் 39,333 வாகனங்கள் விற்பனையாகி, கடந்த ஆண்டு இதே காலத்துடன் ஒப்பிடுகையில் 33% வளர்ச்சியைப் பெற்றது.

Innova Hycross, Fortuner, Urban Cruiser Hyryder, Hilux, Taisor, Glanza போன்ற மாடல்கள் விற்பனையில் முக்கிய பங்கு வகித்தன. மேலும் Land Cruiser 300, ஜிஆர்-எஸ், நியோ ட்ரைவ், ஹைபிரிட் மற்றும் சிறப்பு பதிப்புகள் வாடிக்கையாளர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன. அனைத்து மாடல்களிலும் 6 ஏர்பேக் வசதி, பாரத் என்சிஏபி 5-ஸ்டார் மதிப்பீடு போன்ற பாதுகாப்பு அம்சங்கள் வாடிக்கையாளர் நம்பிக்கையை மேலும் உயர்த்தின.

டொயோட்டா பயன்படுத்தப்பட்ட வாகன மையங்கள் (டியூசிஓ), டி கேர், டி க்ளாஸ் போன்ற சேவைகள் வாடிக்கையாளர்களுக்கு சீரான உரிமை அனுபவத்தை வழங்கின. மேலும், ஜப்பானிய கலை கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் Drum Tao நிகழ்ச்சிகள், டொயோட்டா எக்ஸ்பிரியென்ஷியல் மியூசியம் (டிஇஎம்), அனிமே கலாச்சார நிகழ்வுகள் போன்ற புதுமையான முயற்சிகள் இளைஞர்களுடன் வலுவான இணைப்பை ஏற்படுத்தின.

இது குறித்து டொயோட்டா கிற்லோஸ்கர் மோட்டார் துணைத் தலைவர் திரு. வரீந்தர் வாத்வா கூறுகையில், “2025 ஆம் ஆண்டு எங்களுக்குப் பெரும் வளர்ச்சியைக் கொண்டுவந்துள்ளது. வாடிக்கையாளர் நம்பிக்கை, தயாரிப்பு மேம்பாடு மற்றும் அரசின் சீர்திருத்தங்கள் இந்த முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைந்தன. எதிர்காலத்தில், சுற்றுச்சூழல் பாதுகாப்பை மையமாகக் கொண்டு பல்வேறு தொழில்நுட்பங்களை வழங்கி, இந்தியாவில் டொயோட்டாவை மிக விரும்பப்படும் பிராண்டாக உருவாக்க உறுதியுடன் செயல்படுவோம்” என்றார். 2026 ஆம் ஆண்டில், தயாரிப்பு விரிவாக்கம், வாடிக்கையாளர் அனுபவ மேம்பாடு மற்றும் இளைஞர்களை இணைக்கும் புதுமையான முயற்சிகள் மூலம் டொயோட்டா தனது வளர்ச்சிப் பயணத்தைத் தொடரவுள்ளது.

# ☼‘திரௌபதி 2’ திரைப்படத்தில் நடிகர் சிராக் ஜானி வில்லனாக நடித்திருப்பது படம் மீதான எதிர்பார்ப்பை இன்னும் அதிகரித்துள்ளது!☼

சென்னை 03, ஜனவரி 2026: ரசிகர்கள் மத்தியில் மிகவும் எதிர்பார்க்கப்படும் ‘திரௌபதி 2’ படத்தின் அடுத்த அப்டேட்டாக படத்தின் மூன்று வில்லன்களை அறிமுகப் படுத்துகிறது. அதில் முதன்மை வில்லனாக நடிகர் சிராக் ஜானி நடித்துள்ளார்.

இயக்குநர் மோகன் ஜியின் வரலாற்று ஆக்ஷன் கதையான ’திரௌபதி 2’ திரைப் படத்தின் அறிவிப்பு வெளியானதில் இருந்தே ரசிகர்கள் மற்றும் வர்த்தக வட்டாரத்தில் அதிக எதிர்பார்ப்பு நிலவி வருகிறது. 14 ஆம் நூற்றாண்டின் தென்னிந்தியாவில் வேரூன்றிய காலகட்டக் கதையை பல மொழிகளில் திரையில் பிரம்மாண்டமாக கொண்டுவரவுள்ளது. படத்தின் போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நிறைவடைந்து சமீபத்தில் மத்திய திரைப்படச் சான்றிதழ் வாரியத்திடமிருந்து (சிபிஎஃப்சி) யூ/ஏ சான்றிதழைப் பெற்றுள்ளது ‘திரௌபதி2’ திரைப்படம். ரிச்சர்ட் ரிஷியின் கவர்ந்திழுக்கும் வசீகர தோற்றம், அற்புதமான பாடல்கள் மற்றும் பிரம்மாண்டமான காட்சிகள் ஆகியவை படம் மீதான எதிர்பார்ப்பை மேலும் அதிகரித்துள்ளன. படத்தில் இடம்பெற்றுள்ள மூன்று வலுவான வில்லன் கதாபாத்திரங்களில் முதன்மை வில்லனாக நடிகர் சிராக் ஜானியை அறிமுகப் படுத்துகிறது படக்குழு.

நடிகர் சிராக் ஜானியை தேர்ந்தெடுத்தது குறித்து இயக்குநர் மோகன் ஜி கூறுகையில், “முகமது பின் துக்ளக் கதாபாத்திரத்தில் நடிகர் சிராக் நடித்துள்ளார். வெறும் வில்லனாக மட்டுமல்லாது புத்திசாலித்தனம் நிறைந்த தனது சொந்த முடிவுகளின் விளைவுகளை தைரியமாக எதிர்கொள்ளும் நபராக வருவார். உடல் ரீதியாக வலுவாகவும் அதே சமயம், புத்திசாலித்தனத்தையும் நடிப்பில் கொண்டு வரும் வகையிலான நடிகரை நாங்கள் எதிர்பார்த்தோம். துக்ளக்கை புத்திசாலித்தனமான முட்டாள் என்று வரலாறு நினைவு கூறுகிறது. அந்த முரண்பாட்டைப் படம் பிடிக்க மிகப்பெரிய கட்டுப்பாடு தேவை. சிராக் முழு ஈடுபாட்டுடன் அந்த கதாபாத்திரத்திற்கு தேவையான அச்சுறுத்தல், கண்ணியம் மற்றும் உணர்வுப்பூர்வமான நடிப்பை கொடுத்துள்ளார். அந்த கதாபாத்திரமாகவே வாழ்ந்திருக்கிறார். அவரது நடிப்பு படத்திற்கு மிகப்பெரிய பலம்” என்றார்.



இந்தப் படத்தில் ரிச்சர்ட் ரிஷி கதாநாயகனாகவும், ரக்ஷனா இந்துசுதன் கதாநாயகியாகவும், நட்டி நடராஜ் முக்கிய கதாபாத்திரத்திலும் நடித்துள்ளனர். மேலும் ஒய்.ஜி. மகேந்திரன், நாடோடிகள் பரணி, சரவண சுப்பையா, வேல ராமமூர்த்தி, சிராக் ஜானி, தினேஷ் லம்பா, கணேஷ் கௌரங், திவி, தேவயாணி ஷர்மா மற்றும் அருணோதயன் ஆகியோரும் நடித்துள்ளனர்.

நேதாஜி புரொடக்ஷன்ஸ் சோழ சக்ரவர்த்தி, ஜி.எம். ஃபிலிம் கார்ப்பரேஷனுடன் இணைந்து தயாரித்த 'திரௌபதி 2' திரைப் படத்தின் தொழில்நுட்பக்குழுவில் பிலிப் ஆர். சுந்தர் (ஒளிப்பதிவு), ஜிப்ரான் வைபோதா (இசை), ஆக்ஷன் சந்தோஷ் (ஸ்டண்ட்ஸ்), தணிகா டோனி (நடன அமைப்பு), தேவராஜ் (எடிட்டிங்), மற்றும் கமல்நாதன் (தயாரிப்பு வடிவமைப்பு) ஆகியோர் உள்ளனர். வசனங்களை பத்மா சந்திரசேகர் மற்றும் மோகன் ஜி எழுதியுள்ளனர். சென்சார் பணிகள் முடிவடைந்த நிலையில் ‘திரௌபதி 2’ திரைப் படத்தின் மார்க்கெட்டிங் பணிகள் தொடங்கியுள்ளது. படத்தின் டிரெய்லர் மற்றும் இசை விரைவில் வெளியிடப்படும், அதைத் தொடர்ந்து உலகளவில் திரையரங்க வெளியீட்டு தேதியும் அறிவிக்கப்படும்.

# தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்ற உயிரியல் ஆசிரியர் ர.சவுந்திரபாண்டியனின் கவிதை வடிவம்

சென்னை 03, ஜனவரி 2026: * # ஆங்கிலப் புத்தாண்டில் புதியதாய் பிறப்போம்!!!!*

காலம் நகர்கிறது அமைதியாக,

புதிய தொடக்கம் தருகிறது புத்தாண்டாக.

தேதி மாற்றமல்ல இது....

இது வாழ்க்கை மாற்றம்.

கடந்த காலத் தவறுகள் பாடம் தர,

நம்பிக்கை நம்மை வழி நடத்த,

கோபம், பொறாமை விலகி,

அன்பு, உழைப்பு, உயர்வு மனதில் மலர புத்தாண்டில் நாம் புதிதாக பிறப்போம்.....

*“மாற்றம் ஒன்றே மாறாதது” எனும் உண்மை,* காலம் நமக்கு கற்பிக்கிறது.

*காலம் வரும் போது எல்லாமும் கை கூடும்.*

கடமையை கருத்தாய் பிறர் பாராட்டும் வகையில் நிறைவேற்றுவோம். பத்தாண்டு, உடல் பிறப்பல்ல .....

உள்ளத்தின் எழுச்சி,

சிந்தனையில் உயர்வு...

சொல்லில் தெளிவு....

செயலில் புதுமை.... என அனைத்திலும் வெற்றி வெற்றி!!!

இறை அருளும், நம் முயற்சியும் பயிற்சியும் கைகோர்த்து நடந்தால்,

புத்தாண்டில் புதியதாய் பிறந்து

வாழ்க்கை முழுதும் வளம் பெறுவோம்.



*கவிதை வடிவம்*

*ர.சவுந்திரபாண்டியன், எம்.எஸ்.ஸி., எம்.எட்.,*

*தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்ற உயிரியல் ஆசிரியர் (பணி நிறைவு).*

# சுந்தரம் ஃபைனான்ஸ் மயிலாப்பூர் விழா 2026 ஜனவரி 8 முதல் 11 வரை நடைபெறுகிறது

சென்னை, 03 ஜனவரி 2026: பிரபலமான சுந்தரம் ஃபைனான்ஸ் மயிலாப்பூர் விழாவின் 22வது பதிப்பு ஜனவரி 8 முதல் 11, 2026 வரை நடைபெறும்.

மயிலாப்பூர் எனும் வரலாற்றுச் சிறப்புமிக்க பகுதியில் நடைபெறும் இந்த விழா, சென்னை நகரத்தின் செழுமையான கலாச்சார பாரம்பரியத்தை இசை, நடனம், பாரம்பரிய நடைபயணம், கோலம், தெரு நாடகம் மற்றும் கைவினைப் பொருட்கள் போன்ற நிகழ்ச்சிகளின் மூலம் கொண்டாடுகிறது. வருடாந்திர கலாச்சார நிகழ்வாக, இந்த விழா பொது இடங்களை கலை மற்றும் பாரம்பரியத்தின் உயிரோட்டமான மேடையாக மாற்றுகிறது. நகரம் முழுவதும் உள்ள குடியிருப்பாளர்கள், கலைஞர்கள் மற்றும் கலாச்சார ஆர்வலர்களை ஈர்க்கும் இந்த விழா, சென்னை ‘கலாச்சாரத்தின் மையம்’ என்ற அந்தஸ்தை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

புதிய சுற்றுச்சூழல் நிலைத்தன்மை முயற்சிகள்

இந்த ஆண்டு, சுந்தரம் ஃபைனான்ஸ் ப்ளூ கிரீன் மைல் முயற்சியை அறிமுகப் படுத்துகிறது. இஎஃப்ஐ (என்விரான்மென்டல் பவுண்டேஷன் ஆஃப் இந்தியா) உடன் இணைந்து, “க்ரோ யுவர் ஃபுட்” என்ற திட்டத்தின் மூலம் குடிமக்களுக்கு சமையலறை தோட்டம் அமைப்பதற்கான பயிற்சி வழங்கப் படும். பங்கேற்பாளர்கள் ப்ளூ கிரீன் கிளப் எனும் ஆன்லைன் சமூகத்தில் இணைவார்கள். இஎஃப்ஐ இந்தக் குழுவை வழிநடத்தும். இந்த முயற்சி நாடு முழுவதும் சுந்தரம் ஃபைனான்ஸ் கிளைகளின் க்ரீன் டாஸ்க் ஃபோர்ஸ் (ஜிடிஎஃப்) மூலம் விளீவுபடுத்தப் படும்.

15வது ஆண்டாக, சுந்தரம் ஃபைனான்ஸ் “சே நோ டூ பிளாஸ்டிக் பேக்ஸ்” இயக்கத்தை முன்னெடுக்கிறது.

விழா நாட்களில் 10,000 துணி பைகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும். கூடுதலாக, “கீப் மைலாப்பூர் க்ளீன்” இயக்கம் சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தும்.



விழாவின் சிறப்பம்சங்கள்

கச்சேரிகள்: ஜனவரி 8 முதல் 11 வரை, காலை 7-8 மணி, ஸ்ரீ கபாலீஸ்வரர் கோவிலில்.

குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள்: சதுரங்கப் போட்டி (8, 10, 12 வயதுக்குட்பட்டோர்) மற்றும் கைவினைப் பயிற்சி (காகித குவில்லிங், பானை ஓவியம்) ஜனவரி 10 மற்றும் 11 அன்று லேடி சிவசாமி ஐயர் பள்ளியில்.

ஸ்பிரிட் ஆஃப் மைலாப்பூர் விருது: 2009ல் தொடங்கப் பட்டது. 2026 விருது ஜனவரி 11 அன்று மாலை 6:30 மணிக்கு அறிவிக்கப்படும்.

விழா குறித்த கருத்துகள்

சுந்தரம் ஃபைனான்ஸ் நிர்வாக இயக்குநர் ராஜீவ் லோசன் கூறினார்:

“மயிலாப்பூர் விழா இந்திய கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்கும் எங்கள் உறுதியை பிரதிபலிக்கிறது. திறந்த, அனைவருக்கும் அணுகக்கூடிய இடங்களில் கலைகளை ஆதரிப்பதன் மூலம் சமூக பங்கேற்பை ஊக்குவிக்க விரும்புகிறோம்.”

விழா இயக்குநர் வின்சென்ட் டி’சூசா கூறினார்:

“இந்த ஆண்டு 150க்கும் மேற்பட்ட கலைஞர்கள் நான்கு இரவுகளில் நிகழ்த்துகிறார்கள். எட்டு பாரம்பரிய நடைபயணங்கள், கோலம் போட்டிகள், குழந்தைகளுக்கான சைக்கிள் சுற்றுப் பயணம் போன்றவை இடம்பெறும்.”

# அழைப்பிதழில் பிரபாகரன் படம். வைகோ நடை பயண நிகழ்ச்சியை புறக்கணித்த காங்கிரஸ்

சென்னை 03, ஜனவரி 2026: வைகோ நடைபயணம் துவக்க விழா நிகழ்ச்சியை காங்கிரஸ் கட்சி புறக்கணித்தது.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ திருச்சியில் இன்று சமத்துவ நடைபயணத்தை தொடங்குகிறார். இதனை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். முன்னதாக தொடக்க விழா நிகழ்ச்சியில் பங்கேற்க காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்டு கட்சிகள், மக்கள் நீதி மய்யம் உள்ளிட்ட தி.மு.க. கூட்டணி கட்சிகளுக்கு நேரில் அழைப்பு விடுக்கப்பட்டது. அந்த தொடக்க விழா அழைப்பிதழில் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் படம் அச்சிடப்பட்டு இருந்தது.

கூற்கனவே முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலைப் புலிகள் அமைப்பினருக்கு நேரடி தொடர்பு இருந்தது வெட்ட வெளிச்சமான நிலையில் தொடர்ந்து அந்த அமைப்பை காங்கிரசார் எதிர்த்து வருகிறார்கள். இதற்கிடையே நடைபயண அழைப்பிதழ் வழங்கிய போதே காங்கிரஸ் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை, அதிருப்தி தெரிவித்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் இன்று திருச்சியில் நடைபெறும் வைகோ நடைபயண தொடக்க விழாவை காங்கிரஸ் கட்சி புறக்கணித்துள்ளது. இதில் மாநில நிர்வாகிகள் மட்டுமல்லாமல், மாவட்ட நிர்வாகிகளும் பங்கேற்கவில்லை.

முன்னதாக திருச்சி விமான நிலை யத்தில் நடைபெற்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வரவேற்பு நிகழ்ச்சியிலும் காங்கிரஸ் நிர்வாகிகள் யாரும் பங்கேற்கவில்லை. இது தி.மு.க. கூட்டணியில் சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11, SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## ☼சிஷ்யனை இயக்கும் குரு: ஆர் கே செல்வா (வின்சென்ட் செல்வா) இயக்கத்தில் மிஷ்கின் நடிக்கும் ‘சுப்ரமணி’☼

சென்னை 03, ஜனவரி 2026: தொடக்கம் முதல் இறுதி வரை பார்வையாளர்களை இருக்கையின் நுனியில் அமர வைக்கும் பரபரப்பான கிரைம் திரில்லரான 'சுப்ரமணி' திரைப்படத்தில் இயக்குநர் செல்வாவின் உதவியாளராக தளபதி விஜய் நடித்த 'யூத்' மற்றும் ஜித்தன் ரமேஷ் நடித்த 'ஜித்தன்' திரைப்படங்களில் பணியாற்றிய மிஷ்கின் மிக முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.



ரிச்சர்ட் ரிஷி மற்றும் நட்டி என்கிற நட்ராஜன் சுப்பிரமணியம் முதன்மை வேடங்களில் நடிக்கும் 'சுப்ரமணி' திரைப்படம் குறித்துப் பேசிய இயக்குநர் ஆர் கே செல்வா, "இப்படத்தில் மிஷ்கினை இயக்கியது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. இதுவரை ஏற்றிராத மிக முக்கிய கதாபாத்திரத்தை அவர் இப்படத்தில் ஏற்று நடித்துள்ளார், அற்புதமான நடிப்பை வெளிப்படுத்தி உள்ளார். படப்பிடிப்பு தளத்தில் ஒரு நடிகராக மட்டுமில்லாமல் என்னுடைய உதவி இயக்குநராகவே மீண்டும் மாறி அவர் பணியாற்றியது மறக்க முடியாத அனுபவம். சில காட்சிகளையும் அவர் இயக்கி உள்ளது குறிப்பிடத்தக்கது. ரிச்சர்ட் ரிஷி மற்றும் நட்டியும் சிறந்த பங்களிப்பை அளித்துள்ளனர். ஐந்து கொடூர கொலை சம்பவங்களை மூன்று காவல் அதிகாரிகளின் பார்வையில் வெவ்வேறு கோணங்களில் அணுகி இந்த படுபாதக சம்பவங்களை செய்யும் இருண்ட அரக்கனை மேலும் குற்ற சம்பவங்கள் நிகழ்வதற்குள் கண்டுபிடித்தார்களா இல்லையா என்பதை விவரிக்கும் வகையில் திரைக்கதையை இப்படத்தில் அமைத்துள்ளோம். வித்தியாசமான கதைக்களங்களை எப்போதும் வரவேற்கும் தமிழ் ரசிகர்கள் இப்படத்திற்கும் ஆதரவளிப்பார்கள் என்று நம்புகிறேன்," என்று கூறினார்.

ஆர் கே செல்வா கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கும் 'சுப்ரமணி' திரைப்படத்தில் பிரணவ் மற்றும் பாலாஜி ப்ராஜெக்ட் ஹெட் ஆகவும் இணை தயாரிப்பாளர்கள் ஆகவும் பணியாற்றியுள்ளனர். அப்சல் பெய்க் இப்படத்தின் நிர்வாக தயாரிப்பாளர் ஆவார். தயாரிப்பு நிர்வாகி: எம். ஜெ. பாரதி

தெலுங்கு பிக்பாஸ் புகழ் திவ்யா 'சுப்ரமணி' படத்தின் நாயகியாக நடித்துள்ளார். சென்னை எக்ஸ்பிரஸ் புகழ் ஜாஸ்பர், லொள்ளுசபா சுவாமிநாதன் இப்படத்தில் நடித்துள்ளனர்.

அகிலேஷ் மற்றும் சுந்தர் ராம் கிருஷ்ணன் 'சுப்ரமணி' படத்திற்கு ஒளிப்பதிவு செய்துள்ளனர். 'ஐயோ சாமி நீ எனக்கு வேணாம்' புகழ் சனுக்யா இசையமைக்க அஸ்மின் பாடல்களை எழுதியுள்ளார். படத்தொகுப்பை டான் மேக்ஸின் உதவியாளரான சுஜிர் பாபு கையாள சண்டை பயிற்சிக்கு ராம்போ விமல் பொறுப்பேற்றுள்ளார். எஃபக்ட்ஸ்: சேது, விஎஃப்எக்ஸ்: சுனில் (69 ஷேட்ஸ்), டிசைன்ஸ்: குமரன் கே, மக்கள் தொடர்பு: நிகில் முருகன்

எஸ் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் ஆர் கே செல்வா (வின்சென்ட் செல்வா) இயக்கத்தில் மிஷ்கின், ரிச்சர்ட் ரிஷி, நட்டி நடிக்கும் 'சுப்ரமணி' திரைப்படத்தை விரைவில் திரையரங்குகளில் வெளியிடும் பணிகளை படக்குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

## ☼கோல்டன் கேட் ஸ்டுடியோஸ் தயாரிப்பில் பிக் பாஸ் புகழ் விக்ரமன் கதாநாயகனாக அறிமுகமாகும் புதிய படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்தது!☼

சென்னை 03, ஜனவரி 2026: கோல்டன் கேட் ஸ்டுடியோஸ் தயாரிப்பாளர் திலகவதி கரிகாலன் தயாரித்திருக்கும் புதிய படம் மூலம் பிக் பாஸ் புகழ் விக்ரமன் கதாநாயகனாக அறிமுகமாகிறார். உறவுகள், நகைச்சுவை மற்றும் உணர்வுப்பூர்வமான பல தருணங்களைக் கொண்ட இந்தப் படத்தை பிரீத்தி கரிகாலன் இயக்கியுள்ளார். குடும்ப பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் படத்தின் காட்சிகள், இசை, கதை என அனைத்தும் உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளதை படக்குழு மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளது.



இது பற்றி தயாரிப்பாளர் திலகவதி கரிகாலன் பேசுகையில், “ஒரு படத்தை திட்டமிட்டபடி முடிக்க ஒவ்வொரு துறையும் அர்ப் பணிப்புடன் உழைக்க வேண்டும். அந்தவகையில் படத்தின் நடிகர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் எங்கள் இயக்குநர் என அனைவரும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி உள்ளனர். படத்தை வெளியிடுவதற்கான சரியான தருணத்தை திட்டமிட்டு வருகிறோம். பார்வையாளர்களிடம் படம் சரியாக சென்றடைய வேண்டும் என்பதற்கான மார்க்கெட்டிங், புரோமோஷன் பணிகள் போன்றவற்றையும் தெளிவாக திட்டமிடுவோம்” என்றார்.

படத்தின் டைட்டில், டீசர், டிரெய்லர், ஆடியோ வெளியீடு மற்றும் உலகளாவிய திரையரங்க வெளியீடு குறித்து மிக விரைவில் அறிவிக்கப்படும் என்று படக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

*நடிகர்கள்:* ரொமாண்டிக் எண்டர்டெயினரான இந்தப் படத்தில் விக்ரமன் கதாநாயகனாக நடிக்க அவருக்கு ஜோடியாக சுப்ரிதா நடிக்கிறார். முக்கிய கதாபாத்திரங்களில் ஜென்சன் திவாகர் மற்றும் பலர் நடித்துள்ளனர்.

*தொழில்நுட்பக் குழு:*

ஒளிப்பதிவு: ஸ்ரீதர், படத்தொகுப்பு: ராமர், இசை: அஜீஷ் அசோகன்.

# மீண்டும் தங்கம் சவரன் 1 லட்சத்தை தாண்டியது

சென்னை 03, ஜனவரி 2026: சர்வதேச முதலீட்டாளர்கள், பாதுகாப்பு கருதி, தங்கம் மற்றும் வெள்ளி கொள்முதலில் அதிகளவில் முதலீடு செய்கின்றனர். இதனால் சர்வதேச சந்தையில் தங்கம், வெள்ளி விலை உயர்ந்தது. நம் நாட்டில் அவற்றின் விலைகள் புதிய உச்சத்தை எட்டின. தமிழகத்தில் நேற்று முன்தினம் (டிசம்பர் 31) ஆபரண தங்கம் கிராம் 12,480 ரூபாய்க்கும், சவரன் 99,840 ரூபாய்க்கும் விற்பனையானது. வெள்ளி கிராம், 257 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

நேற்று தங்கம் விலை கிராமுக்கு, 40 ரூபாய் குறைந்து, 12 ஆயிரத்து 440 ரூபாய்க்கு விற்பனை ஆனது. சவரனுக்கு 320 ரூபாய் சரிவடைந்து 99 ஆயிரத்து 520 ரூபாய்க்கு விற்கப்பட்டது. வெள்ளி கிராமுக்கு, ஒரு ரூபாய் குறைந்து 256 ரூபாய்க்கு விற்பனையானது. இந்நிலையில் இன்று தங்கம் விலை சவரனுக்கு 1,120 ரூபாய் அதிகரித்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 640 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கிராமுக்கு 140 ரூபாய் அதிகரித்து ஒரு கிராம் 12 ஆயிரத்து 580 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. ஒரு சவரன் தங்கம் விலை மீண்டும் ஒரு லட்சம் ரூபாயை தாண்டியுள்ளது.

வெள்ளி

வெள்ளி விலை கிராமுக்கு 4 ரூபாய் அதிகரித்து ஒரு கிராம் 260 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. கிலோக்கு 4 ஆயிரம் ரூபாய் அதிகரித்து ஒரு கிலோ 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

விலை உயர்வுக்கு காரணம்

கடந்த அக்டோபரில் சீன வர்த்தகத்துறை அறிவித்த இந்த கட்டுப்பாடுகள் தற்போது அமலுக்கு வந்துள்ளன. இதனால், வெள்ளியை ஏற்றுமதி செய்யும் நிறுவனங்கள் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்படுகிறது. வெள்ளி ஏற்றுமதிக்கு ஒட்டுமொத்த தடை அறிவிக்கப்படா விட்டாலும், 44 நிறுவனங்களுக்கு மட்டும் ஏற்றுமதி உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இதனால், சாதாரண பண்டகமாக வணிகமான நிலையில் இருந்து, அரிய வகை உலோகமாக வெள்ளியை தரம் உயர்த்தும் வகையில், சீனாவின் இந்நடவடிக்கை அமைந்துள்ளது.

## ☼தமிழ் சினிமாவின் மிகப்பெரிய சூப்பர் நேச்சுரல் படமான ‘டிமாண்டி காலனி 3’ படத்தின் அதிரடியான மிரளவைக்கும் முதல் பார்வை தோற்றம் புத்தாண்டு தினத்தில் வெளியாகியுள்ளது!☼

சென்னை 03, ஜனவரி 2026: சூப்பர் நேச்சுரல் திகில் திரைப்படங்களுக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் உண்டு. வெறுமனே ரசிகர்களை பயமுறுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருக்காமல், கதைக்கேற்ற சரியான தொழில்நுட்பத்தை துல்லியமாக திரையில் கொண்டு வந்து பார்வையாளர்களை தக்க வைப்பதிலும் படத்தின் வெற்றி அடங்கியுள்ளது. 'தி கான்ஜுரிங்' மற்றும் 'தி ஈவில் டெட்' போன்ற ஹாலிவுட் ஃபிரான்சைஸ் படங்கள் ஒரே மாதிரியான கதாபாத்திர தொடர்ச்சி மற்றும் சூழ்நிலையுடன் கூடிய சூப்பர்நேச்சுரல் படங்கள் எவ்வாறு ரசிகர்களை தக்கவைக்க முடியும் என்பதை நிரூபித்துள்ளது. தமிழ் சினிமாவிலும் இயக்குநர் அஜய் ஞானமுத்து 'டிமான்டி காலனி' படத்தின் தொடர்ச்சி மூலம் இதேபோன்று ரசிகர்களை தக்க வைத்துள்ளார்.

படத்தின் முந்தைய இரண்டு பாகங்கள் பாக்ஸ் ஆஃபிஸில் வெற்றி பெற்றதை தொடர்ந்து 2026 ஆம் வருடத்தில் உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாக இருக்கும் 'டிமாண்டி காலனி3' படம் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. அந்த வகையில் புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு படத்தின் முதல் பார்வை போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. இது படம் போஸ்ட் புரொடக்ஷன் பணிகளை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதையும் தெரிவித்துள்ளது.



பேஷன் ஸ்டுடியோஸ் தயாரிப்பாளர் சுதன் சுந்தரம் பகிர்ந்து கொண்டதாவது, "'டிமாண்டி காலனி3' படத்துடன் புதுவருடம் தொடங்கியிருப்பது மகிழ்ச்சியாக உள்ளது. கிரியேட்டிவ் தரத்தில் எந்தவித சமரசமும் செய்து கொள்ளாமல் அஜய் படத்தை மிகவும் நேர்த்தியாக எடுத்துள்ளார். தயாரிப்பாளராக எனக்கும் இது நம்பிக்கை அளித்தது. அருள்நிதியின் கமிட்மெண்ட்டும் அவரது உழைப்பும் இந்தப் படத்தின் மிகப்பெரிய நங்கூரம். இரண்டாம் பாகத்தில் நடித்துள்ள நடிகர்களின் கதாபாத்திரங்கள் இன்னும் ஆழமாக இந்த மூன்றாம் பாகத்தில் இருக்கும். ரசிகர்கள் எதிர்பார்ப்பை மூன்றாவது பாகம் நிச்சயம் பூர்த்தி செய்யும்" என்றார்.

இயக்குநர் அஜய் ஞானமுத்து பகிர்ந்து கொண்டதாவது, "புது வருடத்தில் 'டிமாண்டி காலனி3' படத்தின் முதல் பார்வை போஸ்டரை பகிர்ந்து கொள்வது எனக்கு ரொம்பவே ஸ்பெஷல். படத்திற்கு முழு ஆதரவு கொடுத்த சுதன் சாருக்கு நன்றி. கதையில் எந்த விதமான தலையீடும் செய்யாமல் எங்களை சுதந்திரமாக பணிபுரிய வைத்தார். நடிகர் அருள்நிதிக்கும் நன்றி. முந்தைய படங்களை விட இதில் அருள்நிதியின் நடிப்பை நிச்சயம் ரசிகர்கள் கொண்டாடுவார்கள்" என்றார்.

சூப்பர் நேச்சுரல்ஸ் ஃபிரான்சைஸில் இன்னும் பிரம்மாண்ட காட்சிகளுடன் பேஷன் ஸ்டுடியோஸ் சுதன் சுந்தரம் தயாரிப்பில் 'டிமாண்டி காலனி' படத்தின் அடுத்த சீக்வலாக உருவாகியுள்ளது 'டிமாண்டி காலனி3' திரைப்படம். இதன் முந்தைய இரண்டு பாகங்களும் திரையரங்குகள், விநியோகஸ்தர்களுக்கு பெரும் லாபத்தைப் பெற்று தந்த படம் என்பதால் அதன் அடுத்த பாகத்திற்கும் அதிக எதிர்பார்ப்பு நிலவுகிறது.

ஞானமுத்து எழுதி இயக்கியுள்ள 'டிமாண்டி காலனி 3' திரைப்படத்தில் அருள்நிதி மற்றும் பிரியா பவானி சங்கர் ஆகியோருடன் மீனாட்சி கோவிந்தராஜன், அர்ச்சனா ரவிச்சந்திரன், முத்துக்குமார் மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ஜூலை 2025 இல் தொடங்கிய திரைப்படம் இப்போது போஸ்ட் புரொடக்ஷனில் உள்ளது. 2026 கோடை விடுமுறை வெளியீட்டை நோக்கி படக்குழு கவனம் செலுத்தி வருகிறது.

## ☼‘மார்க்’ படம் மூலம் தமிழ் திரையுலகில் அறிமுகமாகும் நடிகை தீப்ஷிகா சந்திரன்!☼

சென்னை 03, ஜனவரி 2026: ‘மார்க்’ படத்தின் மூலம் திறமையான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கும் நடிகை தீப்ஷிகா சந்திரன் தமிழ் சினிமாவில் நம்பிக்கைக்குரிய நட்சத்திரமாக அறிமுகமாகிறார். திறமையான நடிப்பு, ஆழமான அறிவு, வசீகரமான திரை இருப்பு என தீப்ஷிகாவின் திறமை நிச்சயம் தமிழ் சினிமாவில் அவரை அடுத்த பெரிய நட்சத்திரமாக உயர்த்தும்.

‘மார்க்’ திரைப்படத்தில் தீப்ஷிகா வலிமையான வெரைட்டியான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். ‘மார்க்’ படத்தில் அவரது கதாபாத்திரம் முக்கியத்துவம் வாய்ந்ததோடு பார்வையாளர்கள் மத்தியிலும் வரவேற்பைப் பெறும் என்பதில் சந்தேகம் இல்லை. படத்தில் அவரது நடிப்பை பார்த்து பாராட்டியுள்ளவர்கள் நிச்சயம் திறமையாக நடிகையாக அவர் வலம் வருவார் எனவும் தெரிவித்துள்ளனர்.

நடிகையாக வேண்டும் என்ற லட்சியத்தோடு திரைத்துறைக்குள் நுழைந்திருப்பவரான தீப்ஷிகா நடிப்புக்கு தீனி போடும் வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடிப்பதில் அதிக விருப்பம் இருப்பதாக சொல்கிறார். அர்த்தமுள்ள கதைகள்தான் நடிகர்களை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தும் என்கிறார் நம்பிக்கையாக.



’மார்க்’ படத்தில் நடித்துள்ள அனுபவம் குறித்து அவர் பகிர்ந்து கொண்டதாவது, “என் மீது நம்பிக்கை வைத்து என் நடிப்பு திறமைக்கு வாய்ப்பளித்த தயாரிப்பாளர் சத்யஜோதி தியாகராஜன் அவர்களுக்கு நன்றி. இந்தப் படத்தின் இயக்குநர் விஜய் கார்த்திகேயாவின் தெளிவும் வழிகாட்டுதலும் இந்த கதாபாத்திரத்தை திறமையுடன் கையாள உதவியது. மேலும் நடிகர் கிச்சா சுதீப்பின் ஊக்குவிப்பும், அக்கறையும் சகநடிகாராக எனக்கு தேவையான தன்னம்பிக்கை கொடுத்தது. ஒட்டுமொத்த படக்குழுவும் ஆதரவு கொடுத்தனர். ‘மார்க்’ திரைப்படம் உணர்வுப்பூர்வமாகவும் கிரியேட்டிவாகவும் பார்வையாளர்களுக்கு முழுமையான படமாகவும் இருக்கும்” என்றார்.

திறமை, சின்சியாரிட்டி, வசீகரம் மற்றும் உழைப்பு என சினிமாவுக்கு தேவையான அனைத்து தகுதிகளோடும் ‘மார்க்’ திரைப்படம் மூலம் தீப்ஷிகா சந்திரன் புதிய மைல் கல்லை எட்டியுள்ளார். ‘மார்க்’ படத்தின் மீதுள்ள அதீத எதிர்பார்ப்பு போலவே தீப்ஷிகாவின் பிரகாசமான வருங்காலத்திற்கும் திரையுலகினரும் ரசிகர்களும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# ☼ஹாட்ஸ்டார் ஸ்பெஷல்ஸ் நடிகர் விக்ராந்த் நடிப்பில் உருவாகியுள்ள 'எல்பிடபிள்யு- லவ் பியாண்ட் விக்கெட்' இணையத்தொடர் ஜனவரி 1, 2026 முதல் ஜியோஹாட்ஸ்டாரில் ஸ்ட்ரீம் ஆகிறது!☼

சென்னை 03, ஜனவரி 2026: ஹாட்ஸ்டார் ஸ்பெஷல் ஸாக உருவாகியுள்ள 'எல்பி டபிள்யு- லவ் பியாண்ட் விக்கெட்' என்ற ஒரிஜினல் வெப் சீரிஸ் மூலமாக நடிகர் விக்ராந்த் ஓடிடியில் அறிமுகமாகிறார். இந்த இணையத்தொடர் ஜனவரி 1, 2026 முதல் பிரத்யேகமாக ஜியோ ஹாட்ஸ்டாரில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் ஸ்ட்ரீம் ஆகிறது.

இதன் புரோமோ சமீபத்தில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் அதிக வரவேற்பு பெற்றதுடன் நடிகர் விக்ராந்த் கரியரில் திருப்புமுனை ஏற்படுத்தும் கிரிக்கெட் பயிற்சியாளர் கதாபாத்திரத்தில் அவரைக் காண ரசிகர்கள் ஆவலுடன் எதிர் பார்த்துள்ளனர்.

'கனா காணும் காலங்கள்', 'ஹார்ட் பீட்' (சீசன் 1 & 2), 'உப்பு புளி காரம்', 'ஆஃபிஸ்' மற்றும் 'போலீஸ் போலீஸ்' ஆகிய நூற்றுக்கும் அதிகமான லாங் ரன் எபிசோட் கொண்ட இணையத்தொடர்கள் ஹாட்ஸ்டாரில் வரவேற்பு பெற்றதைத் தொடர்ந்து அதே பாணியில் ஆழமான கதை சொல்லலுடன் ரசிகர்களை கட்டிப் போட வருகிறது 'எல்பி டபிள்யு'.




சமீபத்தில் நடைபெற்ற, ஜியோஹாட்ஸ்டார் சவுத் அன்பவுண்ட் நிகழ்வில் அறிவிக்கப்பட்டதன்படி ப்ரீமியர் ஆகும் முதல் அசல் தமிழ் தொடர் இது என்பது குறிப்பிடத் தக்கது. 'எல்பி டபிள்யு - லவ் பியாண்ட் விக்கெட்' கதைப்படி ஒரு காலத்தில் நம்பிக்கைக்குரிய கிரிக்கெட் வீரனாக இருந்த ரங்கனின் கரியரில் பெரிய முன்னேற்றம் இல்லாமல் போகிறது. இப்போது பயிற்சியாளராக இருக்கும் ரங்கன், போராடும் கிரிக்கெட் அகாடமியில் ஒரு பின்தங்கிய அணியைப் பயிற்றுவித்து அதன் இழந்த பாரம்பரியத்தை மீட்டெடுக்கும் பணியை மேற்கொள்கிறார். கிரிக்கெட்டின் பின்னணியில் அமைக்கப்பட்ட இந்தத் தொடரில் விளையாட்டு, உணர்வுப்பூர்வமான தருணங்கள் மற்றும் லட்சியத்தோடு இரண்டாவது வாய்ப்புக்காகப் போராடுவதன் உண்மையான அர்த்தத்தை களத்திற்கு உள்ளேயும் வெளியேயும் படம் பிடித்து காட்ட இருக்கிறது இந்தத் தொடர்.

அருணா ராக்கி திரைக்கதை எழுதியிருக்க கணேஷ் கார்த்திகேயன் இயக்கியுள்ள இந்தத் தொடரில் சிந்து ஷியாம், நியதி, ஹரிஷ், அயாஸ் கான், அக்ஷதா, நவீன், நிகில் நாயர் மற்றும் விஸ்வ மித்ரன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

வெற்றிகரமான 'ஹார்ட்பீட்' இணையத் தொடரை தயாரித்த அட்லீ ஃபேக்டரி 'எல்பி டபிள்யு' தொடரையும் தயாரித்துள்ளது.

வலுவான கதை சொல்லல் மற்றும் கதாபாத்திரங்களுடன், 'எல்பி டபிள்யு - லவ் பியாண்ட் விக்கெட்' தொடர் தலைமுறைகள் கடந்து பார்வையாளர்களை ஈர்க்கும் ஸ்போர்ட்ஸ் கதையாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஜனவரி 1, 2026 முதல் ஜியோஹாட்ஸ்டார் தளத்தில் தமிழில் 'எல்பி டபிள்யு - லவ் பியாண்ட் விக்கெட்' ப்ரீமியர் ஆகிறது.

*ஜியோஹாட்ஸ்டார் பற்றி:*

ஜியோஹாட்ஸ்டார் இந்தியாவின் முன்னணி ஸ்ட்ரீமிங் தளங்களில் ஒன்று. இது ஜியோ சினிமா மற்றும் டிஸ்னி+ ஹாட்ஸ்டார் ஆகியவற்றின் இணைப்பின் மூலம் உருவாக்கப்பட்டது. சிறப்பான கதைக் களங்கள், புதுமையான தொழில்நுட்பத் துடன் ஜியோ ஹாட் ஸ்டார் இந்தியா முழுவதும் உள்ள அனைவருக்கும் பொழுது போக்கை மறுவரையறை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# நடிகர் ரிச்சர்ட் ரிஷியின் 'திரௌபதி 2' திரைப்படம் யூ/ஏ சான்றிதழ் பெற்று வெளியீட்டிற்கு தயாராகி வருகிறது!

சென்னை 03, ஜனவரி 2026: மோகன் ஜி இயக்கத்தில் மிகவும் எதிர்பார்க்கப்படும் வரலாற்று ஆக்ஷன் திரைப்படமாக உருவாகியுள்ள 'திரௌபதி 2', மத்திய திரைப்பட சான்றிதழ் வாரியத்திடமிருந்து (சிபிஎஃப்சி) வெற்றிகரமாக யூ/ஏ சான்றிதழைப் பெற்று, திரையரங்க வெளியீட்டிற்கு தயாராகி வருகிறது.

பலமொழிகளில் உருவாகியுள்ள இந்தப் படத்தில் ரிச்சர்ட் ரிஷி கதாநாயகனாகவும், ரக்ஷனா இந்துசுதன் கதாநாயகியாகவும், நட்டி நடராஜ் முக்கிய கதாபாத்திரத்திலும் நடித்துள்ளனர். மேலும் ஒய்.ஜி. மகேந்திரன், நாடோடிகள் பரணி, சரவண சுப்பையா, வேல ராமமூர்த்தி, சிராஜ் ஜானி, தினேஷ் லம்பா, கணேஷ் கௌரங், திவி, தேவயாணி ஷர்மா மற்றும் அருணோதயன் ஆகியோரும் நடித்துள்ளனர்.




நேதாஜி புரொடக்ஷன்ஸ் சோழ சக்ரவர்த்தி, ஜி.எம். ஃபிலிம் கார்ப்பரேஷனுடன் இணைந்து தயாரித்த 'திரௌபதி 2' திரைப்படம் 14 ஆம் நூற்றாண்டின் தென்னிந்தியாவில் வேரூன்றிய காலகட்டக் கதையை திரையில் பிரம்மாண்டமாக கொண்டுவரவுள்ளது.

இந்தப் படத்தின் தொழில்நுட்பக்குழுவில் பிலிப் ஆர். சுந்தர் (ஒளிப்பதிவு), ஜிப்ரான் வைபோதா (இசை), ஆக்ஷன் சந்தோஷ் (ஸ்டண்ட்ஸ்), தணிகா டோனி (நடன அமைப்பு), தேவராஜ் (எடிட்டிங்), மற்றும் கமல்நாதன் (தயாரிப்பு வடிவமைப்பு) ஆகியோர் உள்ளனர். வசனங்களை பத்மா சந்திரசேகர் மற்றும் மோகன் ஜி எழுதியுள்ளனர். பிரம்மாண்டமான வரலாற்று படமாக உருவாகியுள்ள 'திரௌபதி 2', சிபிஎஃப்சி சான்றிதழ் பெற்ற பிறகு படக்குழு விரைவில் அதிகாரப்பூர்வ வெளியீட்டு தேதியை அறிவிப்பார்கள்.

# ஃபரித்பூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஷியாம் பிஹாரி லாலின் மறைவுக்கு பிரதமர் இரங்கல் தெரிவித்துள்ளார்

சென்னை 03, ஜனவரி 2026: உத்தரப் பிரதேச மாநிலம் ஃபரித்பூரைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஷியாம் பிஹாரி லாலின் மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக ஊடக எக்ஸ் தளத்தில் அவர் பதிவிட்டிருப்பதாவது:




"உத்தரப்பிரதேச மாநிலம் ஃபரித்பூரைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஷியாம் பிஹாரி லாலின் மறைவை அறிந்து மிகவும் வருத்தமடைந்தேன். அவர் பொது சேவையில் அர்ப்பணிப்புடன் பணியாற்றியதுடன், கடினமாக உழைத்த பாஜக தலைவராக இருந்தார். அவரது மறைவு, கட்சிக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

இந்தத் துயரமான நேரத்தில், அன்னாரது குடும்பத்தினருக்கும், ஆதரவாளர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓம் சாந்தி!"

# இயக்குநர் பாரதிராஜா வெளியிட்டார் கபிலன் வைரமுத்து எழுதிய நித்திலன் வாக்குமூலம்

சென்னை 03, ஜனவரி 2026: செயற்கை நுண்ணறிவின் எதிர்காலம் குறித்து துல்லியமாக விவாதிக்கும் 'நித்திலன் வாக்குமூலம்' என்ற நாவல் இன்று வெளியானது. எழுத்தாளரும் பாடலாசிரியருமான கபிலன்வைரமுத்து இதனை எழுதியுள்ளார். முதல் இரண்டு பாகங்களை வெளியிட்ட இயக்குநர் பாரதிராஜா, நிறைவு பாகத்தையும் வெளியிட்டிருக்கிறார். இயக்குநர் இமயம் பாரதிராஜா நூலை வெளியிடும் காட்சி, ஒரு சில தினங்களுக்கு முன் அவரது இல்லத்தில் படமாக்கப்பட்டது. பிரிட்டிஷ் இந்தியாவின் குற்ற இனச் சட்டத்தை மையமாகக் கொண்ட கபிலன்வைரமுத்துவின் ஆகோள் என்ற நாவல் 2022ஆம் ஆண்டு வெளியானது. அதன் இரண்டாம் பாகமான மாக்கியவெல்லி காப்பியம் 2024ஆம் ஆண்டு வெளியானது. ஆகோள் தொடரின் மூன்றாவது மற்றும் நிறைவு பாகமான நித்திலன் வாக்குமூலம் இன்று வெளியானது. ஆகோள் முதல் பாகம், பிரிட்டிஷ் அரசின் கைரேகை சட்டத்திற்கு எதிராகப் போராடி உயிர் நீத்த மதுரை பெருங்காமநல்லூர் வீரர்களின் கதையை இளைய தலைமுறைக்கு



அறிமுகப்படுத்தியது. மாக்கியவெல்லி காப்பியம் என்ற இரண்டாம் பாகம் மாநில சுயாட்சி குறித்த அறிவியல் பார்வையைப் பதிவு செய்தது. நித்திலன் வாக்குமூலம் என்ற இந்த மூன்றாம் பாகம், குற்ற இனச் சட்டம் தோன்றிய வரலாறையும், எதிர்கால செயற்கை நுண்ணறிவு அமைப்புகளின் செயல்பாடு குறித்தும் ஆழமாக விவாதிக்கிறது. ஆகோள் தொடரின் மூன்று நாவல்களையும் டிஸ்கவரி பதிப்பகம் பதிப்பித்திருக்கிறது. வருகிற ஜனவரி 04ஆம் நாள் நித்திலன் வாக்குமூலத்திற்கான 'ஆசிரியர் சந்திப்பு நிகழ்ச்சி', சென்னை டிஸ்கவரி புக் பேலஸ் வளாகத்தில் நடைபெறவிருக்கிறது.

# நாய்ஸ் அண்டு கிரைன்ஸ் தயாரிப்பில் 'நாய் சேகர்' புகழ் கிஷோர் ராஜ் குமார் எழுதி, இயக்கி, நாயகனாக நடிக்கும் காதலும் நகைச்சுவையும் கலந்த கலகலப்பான புதிய திரைப்படத்தின் படப்பிடிப்பு நிறைவு

சென்னை 03, ஜனவரி 2026: திரைத்துறை ஜாம்பவான்கள் கலந்து கொள்ளும் பிரம்மாண்ட கலை நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக தயாரித்து, உருவாக்கி, நடத்துவதன் மூலம் இந்திய ஊடக வெளியில் தனக்கென ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ள முன்னணி ஊடகத் தயாரிப்பு மற்றும் திறமை மேலாண்மை நிறுவனமான நாய்ஸ் அண்டு கிரைன்ஸ் (Noise and Grains), திரைப்பட தயாரிப்பில் களம் இறங்கியுள்ள முதல் படத்தின் படப்பிடிப்பு வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது.

நாய்ஸ் அண்டு கிரைன்ஸ் பேனரில் கார்த்திக் ஸ்ரீநிவாஸ் மற்றும் மகாவீர் அசோக் தயாரிக்கும் இப்படத்தை 'நாய் சேகர்' திரைப்படத்தை இயக்கியவரும், 'கோமாளி', 'கைதி', 'விஐபி 2', 'இமைக்கா நொடிகள்', மற்றும் 'கீ' உள்ளிட்ட படங்களில் நடித்தவரும், நிறைய குறும்படங்களையும் யூடியூப் வீடியோக்களை உருவாக்கியவருமான கிஷோர் ராஜ்குமார் எழுதி இயக்கியுள்ளார்.

படப்பிடிப்பு நிறைவடைந்துள்ள நிலையில், போஸ்ட் புரொடக்ஷன் உள்ளிட்ட பணிகளை முடித்து படத்தை விரைவில் திரையரங்குகளில் வெளியிட படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர். திரைப்படத்தின் பெயர், இசை வெளியீடு குறித்த அறிவிப்புகள் ஒன்றன் பின் ஒன்றாக வெகு விரைவில் செய்யப்படும்.

அனைத்து தரப்பு ரசிகர்களும் குடும்பத்துடன் கண்டு ரசிக்கும் வகையில் இப்படம் உருவாகியுள்ளது, தொடக்கம் முதல் இறுதி வரை நகைச்சுவைக்கு பஞ்சம் இல்லாத வகையில் இந்த திரைப்படம் இருக்கும் என்று குழுவினர் தெரிவிக்கின்றனர்.

இந்த திரைப்படத்தை கிஷோர் ராஜ்குமார் எழுதி இயக்குவதோடு, நாயகனாகவும் நடிக்கிறார். பிரபல மலையாள நடிகையும் 'கொட்டுக்காளி' தமிழ் படத்தில் நடித்தவருமான அன்னா பென் நாயகியாக நடிக்க, முன்னணி நடிகர்கள் முக்கிய பாத்திரங்களில் நடிக்கின்றனர்.




திரைப்படம் குறித்து பேசிய கிஷோர் ராஜ்குமார், "காதலும் நகைச்சுவையும் நிரம்பிய கதை இது. படம் முழுக்க ஃபீல் குட் உணர்வை ரசிகர்களுக்கு தரும் வகையில் திரைக்கதை வடிவமைக்கப்பட்டுள்ளது. பாக்ய ராஜ் சார் இயக்கிய படங்கள் போல இன்றைய காலகட்டத்தில் திரைப்படங்கள் வருவதில்லையே என ரசிகர்களிடையே ஒரு ஏக்கம் உண்டு. அந்த இடைவெளியை நிரப்பும் வகையில் இந்த படம் இருக்கும்," என்றார்.

மேலும் பேசிய அவர், "ஜோடி பொருத்தம் குறித்து பேசும் இந்த கலகலப்பான படம் நாயகிக்கு முக்கியத்துவம் தரும் வகையில் இருக்கும். மிகவும் திறமையான நடிகை என பெயரெடுத்த அன்னா பென் உடன் பணியாற்றியதில் மிகவும் மகிழ்ச்சி. இந்த வாய்ப்பை எனக்களித்த நாய்ஸ் அண்டு கிரைன்ஸ் நிறுவனத்திற்கு மனமார்ந்த நன்றி," என்றார்.

இப்படத்தின் ஒளிப்பதிவாளராகவும் இணை எழுத்தாளராகவும் பிரவீன் பாலு பங்காற்ற, படத்தொகுப்பை ராம் பாண்டியன் கையாள்கிறார். இவர்கள் இருவரும் சதீஷ் நாயகனாக அறிமுகமாகி கிஷோர் ராஜ்குமார் இயக்கிய 'நாய் சேகர்' படத்திலும் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. கலகலப்பான பாடல் ஒன்றுக்கு பிருந்தா மாஸ்டர் நடனம் அமைத்துள்ளார். ஸ்ரீசசிகுமார் கலை இயக்குநர் ஆவார். ஆடை வடிவமைப்பு - கிருத்திகா சேகர், நிர்வாக தயாரிப்பு - எஸ். என். அஸ்ரப்/ நரேஷ் தினகரன்.

நாய்ஸ் அண்டு கிரைன்ஸ் தயாரிப்பில் கிஷோர் ராஜ்குமார் எழுதி, இயக்கி, நாயகனாக நடிக்கும் புதிய திரைப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து படம் வெளியீட்டுக்கு தயாராகி வருகிறது.

# ஆப்கானிஸ்தானில் கன மழையால் வெள்ளப் பெருக்கு; 17 பேர் உயிரிழப்பு

சென்னை 03, ஜனவரி 2026: ஆப்கானிஸ்தானில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 17 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் கடந்த சில நாட்களாக, பனிப்பொழிவுக்கு இடையே கனமழை பெய்து வருகிறது. பர்யாப், படக் ஷான், ஹெராத் கபிசா, பர்வான், டாய்கண்டி, உருஸ்கான், கந்தஹார், பாட்கிஸ், ஹெல்மண்ட் உள்ளிட்ட மாகாணங்களில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது. இதனால், அங்கு வசிக்கும் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கி யுள்ளது.

ஒரு வீட்டின் கூரை இடிந்து விழுந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் உயிரிழந்தனர். கன மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கியும், மின்சாரம் தாக்கியும் இதுவரை 17 பேர் பலியாகியுள்ளனர்; 11 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தானில் சுமார் 1,859 வீடுகள் மற்றும் 13,941 ஏக்கர் விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில், அந்நாட்டு தேசிய பேரிடர் மீட்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர். கனமழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி 1,200 கால்நடைகள் உயிரிழந்ததாக ஆப்கன் தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனம் தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் சேத மதிப்பை அளவிட மதிப்பீட்டு குழுவினர் அனுப்பி வைக்கப்பட் டுள்ளனர்.

இதனால், ஆப்கன் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிப்பட் டுள்ளது.